Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 3, October 2023 E-ISSN: 2583-0481

# Marutham in Sangam Literature

**Dr. S. Ananthi**, Assistant Professor of Tamil, Nirmala College for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2004-8488**
**DOI: 10.5281/zenodo.8397599**

## Abstract

*The study focuses on the Marutham land found in Sangam literature. It is planned to portray the news about Sangam literature and the five-fold landscapes. In the Sangam literature, the message of the life of the Marutham people has been sung in many verses. The people of the Marutham land, their food and the other features of the Marutham land are clarified in Sangam poems. The pastimes of the people are also indicated in it. The news about the towns of the temples is also elaborated in it. It decodes the information about the way the agricultural fields were laid out that is contained in the Sangam literature. This article clarifies the information recorded in the Sangam literature about crops, tillage and seeding systems prevalent in Sangam times. The news about irrigation methods, cultivation and harvest are examined in the study with references from Sangam literature.*

**Keywords:** Sangam Literature, Marudham, Tamil People.

## References

[1] Aravendan, Ira. *Kurunthogai*, New Century Book House, Chennai - 600 098, 2016.
[2] Arumuga Navalar. *Sudaamani Nikandu*. Mullai Pathipagam, Chennai - 600 017, 2016.
[3] Ilampooranar. *Tolkappiyam Poruladhikaram*. Kazhaga Veliyeedu, Tirunelveli Saiva Sidhandha Padhipagam. Chennai – 1, 1969.
[4] Kavignanar Na. Meenavan & T. Murugasamy, Dr. Tamilannal, Dr. Su.Pa. Annamalai (Principal Editors). *Sangam Literature, Agnaanoooru*. First part, *Kalitruyaanai Nirai*. Varthamanan Publishing House, Chennai - 17, 2022.
[5] Kavignanar Na. Meenavan & T. Murugasamy, Dr. Tamilannal, Dr. Su.Pa. Annamalai (Principal Editors). *Sangam Literature*, *Agnaanoooru*. Second Part, *Manimidaipavalam*. Varthamanan Publishing House, Chennai - 17, 2022.
[6] Shanmugam Pillai. M. U & Sundaramurthy. E. *Divagaram* First Vol., Chennai University, Chennai – 600 005, 1990.
[7] Dr. S. V. Subramanian, Dr. Tamilannal, Dr. Su.Pa. Annamalai. *Pathupattu*, 2003.
[8] Bingala Munivar. *Bingala Nikandu*. Madras Ribbon Printing Press Road, Chennai, 1917.
[9] Pulavar Ilangumaran. Ira & Dr. Tamilannal, Dr. Su.Pa. Annamalai. *Sangam Literature, Puranaanooru Moolamum Uraiyum*, Chennai - 17, 2003.
[10] Puliyur Kesigan. *Sangam Literature Ettuthohai, Natrinai*. Ganga Bookstore, 2017.
[11] Puliyur Kesigan. *Puraporul Venbamaalai*. Sharada Publishing House, Chennai - 14.
[12] Vidhuvan Sivanandaiyar. Agaporul Vilakkam Moolamum Uriayum. Jodhida Prakasa Iyandhira Saalai, Kokuvil, Yaazhppanam.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# சங்க இலக்கியங்களில் மருதம்

**முனைவர் ச. ஆனந்தி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-2004-8488
DOI: 10.5281/zenodo.8397599

**ஆய்வுச்சுருக்கம்**

*‘**சங்க இலக்கியங்களில் மருதம்**’ என்னும் இவ்வாய்வில் சங்க இலக்கியங்கள் குறித்தும், ஐந்திணை பாகுபாடு குறித்த செய்திகள் பதிவுசெய்யப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் மருதத்திணை பற்றியும், மருதநில மக்கள் குறித்தும் மருதநில தெய்வம் குறித்தும் இலக்கணங்கள் கூறும் செய்தி தெளிவுபடுத்தப்படுகின்றன. மருதநிலத்தின் பொழுதுகள் பற்றியும் சுட்டிக்காட்டப்படுகின்றன. மருதநிலத்தின் ஊர்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. மருதநில வேளாண் மக்களை அழைத்த முறைமை குறித்தும் இவ்வாய்வின் வழி அறியப்படுகின்றன. வேளாண்மைக் களங்கள் அமைந்த விதம் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது ஆய்வின் மூலம் கண்டறியப்படுகிறது. வேளாண் பயிர்வகைகள் குறித்தும் உழுதல், விதை விதைத்த முறைமைகள் ஆகியன குறித்தும் சங்க இலக்கியம் பதிவு செய்திருப்பது என்பன போன்ற செய்திகளை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது. நீர்ப்பாசனம் குறித்த செய்திகளும், அறுவடைக்களம் குறித்து சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருப்பதும் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.*

**குறிப்புச்சொற்கள்:** சங்க இலக்கியங்கள், மருதம், தமிழ் மக்கள்.

**முன்னுரை**

சங்கப்பாடல்கள் **‘எட்டுத்தொகை’** நூல்கள் என்றும், **‘பத்துப்பாட்டு’** என்று பிரிக்கப்பட்டிருத்தல் காணத்தக்கது. இவை இரண்டும் பதினெண்மேற்கணக்கு நூல்களாகும். ஏராளமான பாடல்கள் ஓலைச்சுவடிகளிலிருந்து அழிந்ததுபோக எஞ்சியவற்றைக் கொண்டு தொகுக்கப்பட்டவையே **சங்க இலக்கியங்கள்** எனப்படுகின்றன. சங்க இலக்கியங்களை அகம், புறம் என்று பகுத்துள்ளனர். காதலைப்பற்றிப் பாடும் பாடல்களை **‘அகம்’** என்றும், அரசனின் வீரம், கொடை, புகழ், சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள், கல்வியின் சிறப்பு போன்றவற்றைப் பற்றிப் பாடும் பாடல்களைப் **‘புறம்’** என்றும் அழைத்தனர்.

சங்க இலக்கியங்களில் மருதநிலமனாது வயலும் வயல் சார்ந்த நிலப்பகுதிகளைக் குறிப்பிடுவதால் வேளாண்மை குறித்த செய்திகளையும், மருதநில மக்கள், மருதநில ஊர்கள், மருதநிலத்தின் பொழுதுகள், மருதநில வேளாண் மக்கள், வேளாண்மைக்களம், வேளாண் பயிர்வகைகள், உழுதல், விதைவிதைத்தல், நீர்ப்பாசனம், அறுவடைக்களம், மற்றும் மருதநில

மக்கள் வேளாண்மையில் சிறந்து விளங்கியிருந்ததையும் ஆழ்ந்து ஆய்வதே **'சங்க இலக்கியங்களில் மருதம்'** என்னும் தலைப்பிலான இவ்வாய்வின் நோக்கமாகும்.

**சங்க இலக்கியங்கள்**

சங்க இலக்கியங்கள் பண்டையத் தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளைப் படம் பிடித்துக்காட்டுவதாக அமைந்திருப்பதால்தான் சங்க இலக்கியங்கள் தமிழர்களின் இரு கண்களாகத் திகழ்வதைச் சான்றுகள் பகர்கின்றன.

**எட்டுத்தொகை நூல்கள்**

எட்டுத்தொகை எனப்படுபவை எட்டு, தொகை நூல்களாகும். இவற்றை,

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை**

என்னும் வெண்பாவால் அறியமுடிகிறது. இவற்றுள் *நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு* ஆகியவை அகநூல்களாகும். பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறநூல்களாகும். பரிபாடல் அகமும், புறமும் கலந்த நூலாகும்.

**பத்துப்பாட்டு**

சிறிய பாடல்கள் எல்லாம் எட்டுத்தொகையுள் அடங்கிவிட, பத்து பெரிய பாடல்களின் தொகுதி பத்துப்பாட்டு எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து**

மேற்கண்ட வெண்பாவால் பத்துப்பாட்டு நூல்களைப்பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. *திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம்* ஆகியவை ஆற்றுப்படை என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தவை. இவை புறப்பாடல்கள் ஆகும். இவை தவிர மதுரைக்காஞ்சியும் புறப்பாடல் ஆகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியவை அகப்பாடல்களாகும். நெடுநல்வாடை அக இலக்கியமா, புற இலக்கியமா என்பது ஆய்வுக்குரியதாக இருந்து வருகிறது.

**ஐந்திணை பாகுபாடு**

தமிழ் இலக்கணத்தில் ஐந்திணை நிலங்கள் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்தாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் குறிஞ்சி என்பது மலையையும் மலை சார்ந்த இடத்தையும், முல்லை என்பது காடுகள் மற்றும் காடுகள் சார்ந்த இடத்தையும், மருதம் என்பது வயல் மற்றும் வயல் சார்ந்த இடத்தையும், நெய்தல் என்பது கடல் மற்றும் கடல் சார்ந்த இடத்தையும், பாலை என்பது வெற்று மணல் பரப்புகளையும் குறிக்கிறது. தமிழ் இலக்கியம்

இந்த ஐந்திணைகளுக்கும் உரிய பல்வேறு சிறப்புகளை எடுத்து இயம்புகிறது. ஒவ்வொரு திணைக்கும் உரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, பூ, மரம், பறவை, ஊர், நீர், பறை, யாழ், பண், தொழில் ஆகியவை பற்றியும் தமிழ் இலக்கணம் சிறப்பித்து கூறுவதை சான்றுகள் வாயிலாக அறியமுடிகிறது.

**மருதத்திணை**

மருதம் என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என அழைக்கப்பட்டது. இதனால் மருதநிலத்தில் வாழ்ந்தோர் உழவுத்தொழில் புரிந்தவர்களாக இருந்து வந்ததைச் சான்றுகள் பகர்கின்றன. மருதநிலத் தலைவர்கள் வேந்தன், மகிழ்னன், ஊரன், கிழவன் என்றும் வேளாண்மை செய்யும் பொருட்டு வேளாளர் என்றும் அழைக்கப்பட்டதை சான்றுகள் உணர்த்துகின்றன. மருத நிலத்தின் கடவுள் இந்திரன் என்பதை இலக்கணங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

**மருதநில தெய்வம்**

தொல்காப்பியம், மருதநில தெய்வதைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை, குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே (தொல்.: பொரு. அகத்திணையியல் - 5)**

என்று மருதநிலக்கடவுளாக வேந்தனைக் குறிப்பிடுகிறது. ஆனால் பிற்கால நூல்கள் இந்திரனை மருதநிலக் கடவுளாகக் கூறுவதைச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன.

**மருதநிலத்தின் மக்கள்**

வேளாண்மை என அறியப்பட்ட உழவுத்தொழில் மருதநிலத்திலே வளர்ச்சி கண்டது. குறிப்பாக தாமிரபரணி ஆறு, காவிரி ஆற்றங்கரை பகுதியில் பழந்தமிழர் முழுமையான வேளாண்மையில் ஈடுப்பட்டதை சான்றுகள் பகர்கின்றன. தொல்காப்பியம், மருதநிலத்தில் வாழ்கின்ற மக்கள் எனத் தனியாகக் குறிப்பிடாமல்,

**ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை**
**ஆனா வகைய திணைநிலைப் பெயரே (தொல்.: பொரு. அகத்திணையியல் - 24)**

என்று குறிப்பிடுகின்றது. அந்தந்த நிலத்திற்குரிய, நிலப்பெயர் அடிப்படையில் மக்கட்பெயர் பகுக்கப்பட்டிருந்தது என்பது செய்யுளின் பொருளாகும். நாற்கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கம், **“உழவர் உழத்தியர் கடையர் கடைசியர்” (நம்பியகப்பொருள்: 23)** என மருதநில மக்களை இருவகையாகக் குறிப்பிடுகின்றது. புறப்பொருள் வெண்பாமாலை,

**களமர் கதிர்மணி காலோகம் செம்பொன்**

**வளமனை பாழாக வாரிக் – கொளன்மலிந்து**
**கண்ணார் சிலையார் கவர்ந்தார் கழல்வேந்தன்**
**நண்ணார் கிளையலற நாடு (புறப்பொருள் வெண்பாமாலை: 15)**

என்று குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. மேற்கண்டவாறு இலக்கணநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள உழவர், உழத்தியர், கடையர், கடைசியர், ஊரன், மகிழன், களமர் என்பன போன்ற ஒரு சில பெயர்களில் மருதநில மக்கள் அழைக்கப்பட்டமையை சான்றுகள் வாயிலாக அறியமுடிகிறது.

கி.பி. 900 - களில் சோழ ஆட்சியின் மீள் வருகையின் பின்னர் மருதநிலம் பெருவளர்ச்சி கண்டதைச் சான்றுகள் பகர்கின்றன. சோழர்கள் தொண்டை நாட்டையும், கொங்கு நாட்டையும் கைப்பற்றி அங்கிருந்த குறும்பர், வேட்டுவர் ஆகியோரையும் வென்று அவர்களின் நிலங்களில் வேளாண்மை செய்துள்ளதையும் அறியமுடிகிறது. இக்காலக் கட்டத்தில் அங்கு வெள்ளாளரை குடியமர்த்தி மருதநிலத்தை விரிவுபடுத்தியும் இருந்தமையைச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. இக்காலக் கட்டத்தில் எழுந்த *திவாகர நிகண்டு*,

**களமர் தொழுவர் மள்ளர் கம்பளர்**
**வினைஞர் உழவர் கடைஞர் இளைஞர்**
**கழனிக் கடைந்தவர் பெயரே (திவாகர நிகண்டு: 304)**

என்று குறிப்பிடுகிறது. இதனைப் போன்றே பிங்கல நிகண்டும்,

**களமர் உழவர் கடைஞர் சிலதர்**
**மள்ளர் மேழியர் மருதமாக்கள் (பிங்கல நிகண்டு: 132)**

என்று மருத நிலமக்களைக் குறிப்பிடுகின்றது. சூடாமணி நிகண்டு,

**களமரே தொழுவர் மள்ளர் கம்பளர் உழவரொடு**
**வினைஞர் கடைஞர் ஏழ்பேர் (சூடாமணி நிகண்டு: 71)**

என்று குறிப்பிடுகின்றது.

**மருத நிலத்தின் பொழுதுகள்**

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பெரும் பொழுதுகளும் வைகறை, விடியல் என்னும் சிறுபொழுதுகளும் மருதநிலத்துக்குரிய பொழுதுகளாகும் என்பது இலக்கண நூலாரால் வகுக்கப்பட்டவையாகும்.

**மருத நிலத்தின் கருப்பொருட்கள்**

| வ.எண் | கருப்பொருள் | |
|---|---|---|
| 1. | தெய்வம் | இந்திரன் / வேந்தன் |
| 2. | மக்கள் | மள்ளர், மள்ளத்தியர், உழவர், உழத்தியர், கடையர், ஊரான், கடைசியர், வினைஞர், சிலதர் |
| 3. | பறவைகள் | கொக்கு, நாரை, குருகு, வாத்து, அன்றில் |
| 4. | விலங்குகள் | எருமை, நீர்நாய், பசு, காளை, ஆடு |

| | | |
|---|---|---|
| 5. | **மலர்கள்** | தாமரை, கழுநீர், குவளை, அல்லி |
| 6. | **மரங்கள்** | காஞ்சி, மருதம் |
| 7. | **உணவு** | செந்நெல், வெண்நெல், அரிசி |
| 8. | **பண்** | மருதப்பண் |
| 9. | **யாழ்** | மருதயாழ் |
| 10 | **பறை** | நெல்லரி |
| 11. | **தொழில்** | களைகட்டல், களை பறித்தல், நாற்று நற்றல், ஏறுதழுவுதல், நெல்லரிதல், கடாவிடல் |
| 12. | **நீர்நிலை** | பொய்கை, ஆறு, ஏரி, குளம் |

**மருதநில ஊர்கள்**

மருதநில வேளாண்மை பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் காட்டு நிலத்திற்கும், கடலோர நிலத்திற்கும் இடைப்பட்ட நீர் வளமிக்க ஆற்றுப்படுகையில் அமைந்த ஊர்கள் மருதநில ஊர்கள் என அழைக்கப்பட்டன. இப்பகுதியில் மருத மரங்கள் மிகுதியாகக் காணப்பட்டதைச் சான்றுகள் பகர்கின்றன. இந்நிலப்பகுதி பல்வேறு பயிர் வகைகளை வேளாண்மை செய்ய ஏற்ற நிலவளமும் நீர்வளமும் கொண்ட பகுதியாக இருந்துள்ளன. மருதநில ஊர்களைச் சுற்றிலும் குளிர்ந்த வயல் பரப்புகள் காணப்பட்டதைச் சான்றுகள் வாயிலாக அறியலாம். பல்வகை உணவுப் பொருட்கள் கொண்ட குதிர்கள் வீடுகளில் இருந்ததையும் சான்றுகள் உணர்த்துகின்றன. மருதநில மக்களிடம் வாழ்க்கைக்கு வேண்டிய பல்பொருளும் நிரம்பியிருந்ததால் பசியின் கொடுமையை அறியாதிருந்தனர் என்னும் செய்தியை,

**தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை**
**மல்லல் பேர்ஊர்....(பெரும்பாணாற்றுப்படை 253-254)**

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடலின் மூலம் அறியலாம்.

**மருத நில வேளாண் மக்கள்**

மருத நிலத்துத் தலைமகனை **'மகிழ்நன்' 'ஊரன்'** என்று அழைத்ததையும் இம் மருத நிலத்தில் வாழும் வோளண் மக்களைக் களமர், தொழுவர், உழவர், தொழுவர், அரிநர், வினைஞர், அரிஞர், அரிவணர், கடைசியர், ஏராளர் என்று புலவர்கள் கூறுவதையும் சான்றுகள் எடுத்துரைக்கின்றன.

**...அரி நெல்லின்**
**இனக் களமர் (பொருநராற்றுப்படை 193-194)**

என்னும்பொருநராற்றுப்படைப் பாடல் வாயிலாக அறியப்படுகிறது. மேலும் பெரும்பாணாற்றுப்படையில், **கருங்கை வினைஞர்..." (பெரும்பாணாற்றுப்படை 223)** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மருதநில வேளாண் மக்களை, உழுதுண்ணும் வேளாண் மக்கள் என்றும் உழுவித்து உண்ணும் வேளாண் மக்கள் என்றும் இருவகையாகக்

குறிப்பிடப்பட்டிருப்பதை தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உரை வாயிலாக அறியமுடிகிறது.

**வேளாண்மைக்களம்**

வேளாண்மைக்குரிய நிலத்தைச் சங்க இலக்கியங்களில் **வன்புலம், மென்புலம்** என்னு இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. மருதநிலம் நீர்வளம் மிக்க பகுதியாதலால் **மென்புலம்** என்றே இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதை, **"மென்புல வைப்பின் நல் நாட்டுப் பொருந!" (புறநானூறு 42:18)** என்னும் புறநானூற்றுப்பாடல் உணர்த்துகின்றது. மேலும், மருதநில மக்கள் வேளாண்மை செய்யும் நிலத்தை களம், செய், தண்டலை, தண்ணடை, பணை, புலம், பழனம், போன்ற பெயர்களில் அழைத்ததற்கு சங்க இலக்கியங்கள் சான்றளிக்கின்றன. இதனை,

**அரிஞர் யாத்த அலங்குதலைப் பெருஞ்சூடு**
**கள் ஆர் வினைஞர் களம்தொறும்...! (அகநானூறு 84: 12-13)**
**பசி என அறியாப் பணை பயில் இருக்கை (அகநானூறு 91: 14)**

என்னும் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

**வேளாண்ப் பயிர்வகைகள்**

மருத நில மக்கள் தங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக வேளாண்மைப் பயிர் வகைகள், நெல், கரும்பு போன்றவை முக்கியத்துவம் பெற்றன. வாழை, வெற்றிலைக்கொடி, உளுந்து போன்றவையும், செந்நெல், வெண்ணெல் போன்ற நெல் வகைகள் மருதநில வயல்களில் அதிகமாக விளைவிக்கப்பட்டன என்பதை அகநானூற்றுப்பாடலும், கரும்பும் அதிகமாக விளைவிக்கப்பட்டன என்பதை பொருநராற்றுப்படைப்பாடல் மற்றும் ஐங்குறுநூற்றுப்பாடலும் வெளிப்படுத்துகின்றன. உளுந்து, போன்ற பயறு வகைகள் ஊடு பயிர்களாக விளைவிக்கப்பட்டதை ஐங்குறுநூற்றுப் பாடல்வழி அறியலாம். மேலும், வெற்றிலைக் கொடிகளைத் தனியே வளர்த்துப் பயிர் செய்ததை,

**...இன்நீர்ப் பசுங்காய்,**
**நீடு கொடி இலையினர்... (மதுரைக்காஞ்சி: 400 - 401)**

என்னும் பாடலடிகள் வாயிலாக அறியமுடிகிறது.

**உழுதல்**

மருதநில மக்களின் உழுதலுக்குப் பயன்படுத்திய கருவிகள் அவர்களின் பண்பாட்டை பதிவு செய்யும் விதத்தில் அமைகின்றன. உழவுக்கருவிகள் ஏர், உழுபடை, நாஞ்சில் என்ற பெயர்களில் வழங்கப்பட்டன. வேளாண்மைக்கு முதலில் கலப்பையில் எருதுகளைப் பூட்டி நிலத்தை நன்றாக உழுது பழக்கப்படுத்தியதை,

**நெடு நெல் அடைச்சிய கழனி ஏர் புகுத்து**
**குடுமிக் கட்டிய படப்பையொடு (அகநானூறு: 41: 4-5)**

மேற்கண்ட பாடல் மூலம் அறியலாம். மேலும், சேற்றுழவு உழுதலையும், நெல் அறுவடை செய்த பின் மீண்டும் உழுதலையும், மழை பெய்த போது நிலத்தை உழுததையும் சங்கப்பாடல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

**பகடு சேறு உதைத்த புள்ளி வெண் புறத்து**
**செஞ்சால் உழவர் கோல் (நற்றிணை 340: 6-7)**
**அரிகால் மாறிய அம் கண் அகல்வயல்**
**மறு கால் உழுத ஈரச் செறுவின் (நற்றிணை 210: 1-2)**

என்று நற்றிணையும்,

**ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து**
**ஓரேர் உழவன் போல (குறுந்தொகை 131: 4-5)**

என்று குறுந்தொகையும் எடுத்துரைக்கின்றன.

**விதை விதைத்தல்**

நிலத்தை நன்றாக உழுது பக்குவப்படுத்தியப் பின்னர் விதைகளை விதைத்தனர். மேலும், விதைத்தபின் விதைகளைக் கொண்டுச் சென்ற கடகப்பெட்டியில் கழனிகளில் கிடைக்கும் மீன்களைப் பெண்கள் எடுத்துச்சென்றனர் என்னும் செய்தியை,

**அரிகால் மாறிய…**
**…வித்தொடு சென்ற வட்டி பற்பல**
**மீனொடு பெயரும் (நற்றிணை 210)**

என்னும் நற்றிணை பாடலடிகள் உணர்த்துகின்றன.

**நாற்று வளர்த்தல் மற்றும் பறித்து நடுதல்**

உழுத வயலில் உழுவர்கள் அதிகாலையிலேயே நடுகை ஆட்கள் நாற்று நட்டதைச் சங்கப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. நாற்றங்காலில் வளர்க்கப்பட்ட பயிர், பறிக்கப்பட்டுப் பின்னர், வயல்களில் நடப்படும் பழக்கம் மருத நிலத்து வேளாண்மை பண்பாட்டைப் பதிவு செய்கிறது. மேலும் நெல்லை அப்படியே விதைத்து வளர்க்கும் வழக்கம் மருதநில மக்களிடையே இல்லையென்பதும் சான்றுகள் வாயிலாகத் தெளிவாகத் தெரிகிறது. இதை,

**பெரு நெற் பல் கூட்டு எருமை உழவ!**
**கண்படை பெறாஅது, தண் புலர் விடியல்…**
**…நீர் உறு செறுவின் நாறு முடி அழுத்த நின்**
**நடுநரொடு சேறிஆயின் (நற்றிணை 60: 2-8)**

மேற்கண்ட பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**நீர்ப்பாசனம்**

தொல்காப்பியம் நீர்ப்பாசனம் குறித்து, **“வருவிசை புனலைக் கற்சிறை போல / ஒருவன் தாங்கிய பெருமையானும்” (தொல்காப்பியம்: பொருளதிகாரம், பொருள் 65)** என்னும் நூற்பாவால் குறிப்பிடுகின்றது. விசையோடு வரும் நீரை ஓர் அணைக்கட்டுத் தடுத்து

நிறுத்துவது போல, வேகமாக முன்னேறி வரும் ஒரு படையை, உறுதியோடு முதலாவதாக முன் சென்று அதனைத் தடுத்து நிறுத்தக் காரணமாவதன் மூலம், ஒரு வீரன் பெருமையடைகிறான் என்பது இதன் பொருளாகும். பழந்தமிழர்கள் ஆற்றில் வரும் நீரை கற்களால் ஆன கட்டுமானத்தைக் கொண்டு சிறைப்படுத்தி, கட்டுப்படுத்தி பாசனத்துக்குப் பயன்படுத்தினர் என்பதை இப்பாடல் வாயிலாக அறியமுடிகிறது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடம் குடபுலவியனார் என்ற புலவர்,

**உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே:**

**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசினோரே (புறநானூறு 18)**

என்று கூறுவது நீர்ப்பாசனத்தின் இன்றியமையாமையைப் பறைசாற்றுகின்றன. உடலுக்கு உணவு கொடுத்தவர்கள் தான் உயிர் கொடுத்தவர்கள். உடல் இருக்க உணவே காரணம். உணவு என்பது நீரும் நிலமும் சேருவதால் உருவாக்கப்படுவது. ஆகவே நீரையும் நிலத்தையும் சேர்த்தவர்களே உடம்பையும் உயிரையும் படைத்தவர்கள் என்பது இதன் பொருளாக அமைகிறது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம், வெள்ளைக்குடி நாகனார் என்கிற மற்றுமொரு சங்ககாலப்புலவர்,

**வருபடைத் தாங்கிப் பெயர்புறத்து ஆர்த்துப்**

**பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை**

**ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே (புறநானூறு 35)**

என்று கூறுகிறார். அதாவது, போர்க்களத்தில் மன்னது படை எதிரியை வென்று ஆர்ப்பரித்துக் கொண்டாடுவதற்கு மூலக்காரணம் உன் நாட்டு உழவர்கள் நிலத்தில் ஆழ உழுது விளைவித்த நெற்குவியலே ஆகும் என்பது பாடலின் கருத்தாகும். உணவு உற்பத்தியே, வேளாண்மை வளர்ச்சியே நாட்டினுடைய எல்லா வெற்றிற்கும் மூலக்காரணம் என்ற உண்மை நிலையையும், அதற்கு நீர்நிலைகளைப் பெருக்குவதே சிறந்த வழி என்பதையும் இப்பாடல்கள் தெளிவுபடுத்துகிறது. இரண்டாம் கரிகாலன் குறித்துக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலையில், **‘காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி’** என்று குறிப்பிடுவது கரிகாலன் காட்டை அழித்து, குளம் கட்டி, விளைநிலங்களைப் பெருக்கினான் என்னும் பொருளாகும்.

அன்று ஏரிகள் மிகச்சிறந்த தொழில்நுட்பத்தோடு கட்டப்பட்டன என்பதும், ஏரி போன்ற நீர்நிலைகளின் அழிவு என்பது மிகப்பெரும் துயரச் சம்பவமாகக் கருதப்பட்டது என்பதும் கீழ்கண்ட சங்கப்பாடலால் அறியலாம்.

**அறையும் பொறையும் மணந்த தலைய**

**எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்**

**தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ**
**கூர்வேல் குவைஇய மொய்ம்பின்**
**தேர்வண் பாரி தண்பறம்பு நாடே (புறநானூறு 118)**

'கூரிய வேலையும் திரண்டதோளையும் உடைய பாரியின் பறம்பு மலையில் உள்ள எட்டாம் நாள் பிறையை ஒத்த வளைந்த கரைகளையும் தெளிந்த நீரையும் உடைய சிறுகுளம் பாதுகாப்பார் இல்லாமையால் பாழ்படுகிறதே' என கபிலர் துயரப்படுவதையும், எட்டாம் நாள் பிறை வடிவில் அமைந்த குளம், குறைந்த நீளம் உடைய கரையைக் கொண்டு அதிகக் கொள்ளளவு கொண்ட நீரைக் கொண்டிருக்கும். அது போன்ற சிறப்புமிக்க இச்சிறு குளம் பாழாகிறதே என வருத்தப்படுவதையும் பாடல் எடுத்துரைக்கிறது.

தமிழர்கள் நீர்நிலைகளை உருவாக்குவதில் மட்டுமின்றி அதனை நன்கு பாதுகாத்துப் பராமரிப்பதிலும் சிறந்து விளங்கினர். நக்கண்ணையார் என்ற சங்ககாலப் புலவர்,

**துய்அவிழ் பனிமலர் உதிர வீசித்**
**தொழின்மழை பொழிந்த பானாட் கங்குல்**
**எறிதரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்**
**பெருங்குளம் காவலன் போல,**
**அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே (அகநானூறு 252)**

என்கிறார். ஏரிகளின் கரைகள், கலிங்கு, மதகுகள் போன்றவற்றைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும், ஏரிநீரை பாசனத்துக்குப் பிரித்து வழங்குவதுமான பணிகளைச் செய்ய முறையான அமைப்பு ஒன்று இருந்துள்ளது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**அறுவடைக்களம்**

கழனிகளில் விளைந்து காணப்பட்ட கதிர்கள் முற்றிச் செந்நிறமானவுடன் அந்நெற்கதிர்களை உழவர்கள் அறுவடை செய்து களத்து மேடுகளில் அடுக்கிய பின்னர் பெருங்களத்தில் கதிர்களைக் களைத்துப் பரப்பி அவற்றின் மேல் கடா விட்டு நெல்லை வேறாகப் பிரிப்பார்கள். பின்னர் திரட்டிய நெற்குவியல் தூசியோடு காணப்படுவதால் அவற்றை முறங்களில் அள்ளி மேல்காற்றில் தூற்றுவார்கள். இதனை,

**குன்றுஎனக் குவைஇய குன்றாக் குப்பை**
**கடுந்தெற்று மூடையின் இடம்கெடக் கிடைக்கும்,**
**சாலி நெல்லின்இ சிறைகொள் (பொருநராற்றுப்படை 244-246)**

என்னும் பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன. இவ்வாறான தூற்றிய நெற்குவியலை உழவர்கள் தங்களின் இல்லங்களில் குதிர்களில் சேர்த்து வைப்பார்கள். மேலும், களத்தில் வரும் இரவலர்களுக்கு நெல்லை வாரிவழங்கும் இப்பண்பு வேளாண் பண்போடு கொடைப்பண்பும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது என்பதனை,

**பெருங்களம் தொகுத்த உழவர் போல,**
**இரந்தோர் வறுங் கலம் மல்கவீசி (அகநானூறு 30: 8-9)**

என்னும் பாடல் உணர்த்துகின்றது.

**முடிவுரை**

இலக்கியங்கள் சமுதாயத்தோடு இணைந்த வாழ்வியல் கூறுகளை எடுத்துக் காட்டியுள்ளது என்பதும் சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் என்பதும் அவை அகம், புறம், அகப்புறம் எனப்பிரிக்கப்பட்டுள்ளதும் அறியப்படுகிறது. மருத நிலம் குறித்து இலக்கணங்கள் கூறும் செய்திகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் ஐந்திணை நிலப்பாகுபாடு குறித்தும் மக்களின் வாழ்க்கை முறை குறித்தும் மருதத்திணை, மருத நிலமக்கள், மருதநில தெய்வம் குறித்தும் இலக்கணங்களில் பயின்று வருவதைச் சான்றுகள் வாயிலாக அறியமுடிகிறது. மருதநிலத்தின் மக்கள், மருத நிலத்தின் பொழுதுகள், மருத நில ஊர்கள், மருத நில வேளாண் மக்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் சுட்டுக்காட்டடப்பட்டுள்ளது இவ்வாய்வின் வழி அறியப்படுகிறது. வேளாண்மைக் களம், வேளாண்மைப் பயிர் வகைகள், உழுதல், விதை விதைத்தல் என்பன போன்ற செய்திகள் சங்க இலக்கியங்களில் நிலவி வருவதைச் சான்றுகள் உணர்த்தியுள்ளன. நீர்ப்பாசனம், அறுவடைக் களம் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பது இவ்வாய்வின் வழி தெளிவுபடுகிறது.

**குறிப்பு நூல்கள்**

[1] அறவேந்தன். இரா, குறுந்தொகை. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600 098, 2016.

[2] ஆறுமுக நாவலர். (ப.ஆ), *சூடாமணி நிகண்டு.* முல்லை நிலையம், சென்னை - 17, 2016

[3] இளம்பூரணர். (உ.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம்.* கழகவெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாத நூற்பதிப்புக் கழகம், சென்னை – 1, 1969.

[4] கவிஞர் நா. மீனவன் தெ. முருகசாமி. (உ.ஆ), முதன்மைப்பதிப்பாசிரியர்கள், முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை. *சங்கஇலக்கியம், அகநானூறு.* முதற்பகுதி, *களிற்றுயானை நிரை.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17, 2022.

[5] கவிஞர் நா.மீனவன் தெ.முருகசாமி (உ.ஆ), முதன்மைப்பதிப்பாசிரியர்கள், முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை. *சங்க இலக்கியம், அகநானூறு* இரண்டாம்பகுதி, *மணிமிடைப்பவளம்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17, 2022.

[6] சண்முகம்பிள்ளை.மு (ப.ஆ) சுந்தரமூர்த்தி.இ (ப.ஆ), *திவாகரம்.* முதல் தொகுதி, இயக்குநர், பதிப்புத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 600 005, 1990.

[7] முனைவர் ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ), முனைவர் தமிழண்ணல் (ப.ஆ), முனைவர் சுப. அண்ணாமலை (ப.ஆ). *பத்துப்பாட்டு.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17, 2022.

[8] பிங்கல முனிவர். *பிங்கல நிகண்டு மூலமும் உரையும்.* மதராஸி ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை, 1917.

[9] புலவர் இளங்குமரன். இரா (உ.ஆ), முதன்மைப் பதிப்பாசிரியர்கள், முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை. *சங்க இலக்கியம், புறநானூறு மூலமும் உரையும்*. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17, 2003.

[10] புலியூர் கேசிகன். (உ.ஆ), *சங்க இலக்கியம் எட்டுத்தொகை, நற்றிணை.* கங்கை புத்தக நிலையம், சென்னை - 600 017, 2017.

[11] புலியூர் கேசிகன். (உ.ஆ), *புறப்பொருள் வெண்பாமாலை.* சாரதா பதிப்பகம், சென்னை - 600 014.

[12] வித்துவான் சிவாநந்தையார். (ப.ஆ), *அகப்பொருள் விளக்கம் மூலமும் உரையும்.* சோதிடப் பிரகாச இயந்திர சாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.